REGISTERED No. M. 1318.

ஓம்.

நாமகள் நற்றுணை.

தமிழ் மகவு.

புதுவைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் வெளிவரும்

தமிழ்ப் பத்திரிகை.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே.

ஆண்டு — க.	காளயுக்தி வரு ஆவணி மீ 1918-ம் ஆடு ஆகஸ்டு மீ	மதி — கக.

உள்ளுறை:

பக்கம்.

க. விவேகம். ... ... கஉக.

உ. தமிழ்நாட்டுத் தற்காலத்தார்.... ... ... கஉந.

ந. பத்துப்பாட்டு. ... ... கஉஎ.

ச. நம் தாய்மொழியும் அதன் பெருமையும். ... கஉகூ.

ரு. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். ... கநிக.

பத்திராசிரியர்:— வீ. துரைசாமி முதலியார்,
கவர்ன்மெண்ட் கல்விச்சாலைத் தமிழ்ப் பண்டிதர்,
புதுவை.

வருடச் சந்தா விவரம்:

உள்ளூர்க்கு ...	ரூ ?	வெளிநாட்டுக்கு ...	ரூ க
வெளியூர்க்கு ...	ரூ [illegible]	தனிப் பிரதி	... அணா க

சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜ்

தமிழ்ப்பண்டிதர் ஆகிய

மகா மகோபாத்தியாயர்,

ஸ்ரீலஸ்ரீ வே. சாமிநாத ஐயர் அவர்கள் எழுதிய

அபிப்பிராயம்.

புதுவைத் தமிழ்ச்சங்கத்தார் வெளிப்படுத்திவரும் "தமிழ் மகவு" என்னும் பத்திரிகையிற் சில சஞ்சிகைகளைப் படித்துப் பார்த்தேன்; அப்பெயர் அதற்குத் தக்கதென்றே தோற்றியது. கற்றறிந்த புலவர்கள், பழைய தமிழ்ப் புலவர்களைப் பற்றியும் வள்ளல்களைப்பற்றியும் சங்க நூல்களைப்பற்றியும் பிற அரிய விஷயங்களைப்பற்றியும் இதில் எழுதிவருதலால் இக்காலத்தில் நூலாராய்ச்சி செய்வோர்க்கு இது மிக்க பயனை அளிக்குமென்று எண்ணுகிறேன்.

இங்ஙனம்

வே. சாமிநாதையர்.

ஓம்.

நாமகள் நற்றுணை.

தமிழ் மகவு.

புதுவைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் வெளிவரும்

தமிழ்ப் பத்திரிகை.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே.

ஆண்டு — க.	காளயுக்தி ௵ ஆவணி ௴ 1918-ம் ௵ ஆகஸ்டு ௴	மதி — கக.

விவேகம்.

(ககக - ம் பக்கத் தொடர்ச்சி.)

இனிச் சிவத்தைப்பற்றித் தவத்தைப் புரியுங்கால் பிறர் தன்னைப் பெரியன் என்று எண்ணவேண்டும் எனப் பெருமைபாராட்டலாகாது. உயிர்க்குயிராய் நிறைந்துறையும் இறைவனொருவனே தான் செய்யும் தவத்தையும் அவத்தையுங்கண்டு வீடும் பந்தமும் மேவுவிப்பான்; உலகத்தார் கொண்டாடும் பெருமையால் யாது பயனும்? சீவர்கள் சாக்ஷி குறியாமல் சிவனது திருவடி சாக்ஷியாக அரியதவத்தைச்செய்தால் பின்னை அப்பரமேசன் இவ்வுலகினுள்ளார் யாவரும் கண்டு இவர்போற் பெரியார் யார் என்று வந்து இறைஞ்சுகின்ற அளவில் பெருமையை யருளுவன்.

நாம்பெரிய ரென்னுமதை நாடா நடக்குமவர்
தாம்பெரிய ரென்றுமறை சாற்றியிடும்—நாம்பெரியர்
என்பார் சிறியர் இவரலா திவ்வுலகில்
'துன்பார் சுமப்பார்கள் சொல்.

என்றார் சான்றோர். (சிவபோதகசாரம்.)

இங்ஙனம் பெருமை குறியாது அருமையான தவத்தைச் செய்யுஞ் சமயத்துத் தேவபோக முதலியவற்றைக் கண்டுள்ளம் திரும்பிவிடலாகாது. காசிபர் தவஞ்செய்யும்போது மாயையென்பாள் வந்துசெய்த மாயையால் மனமயங்கித் தவமிழந்து வருந்தினர். விசுவாமித்திரர் மேனகையாற் றவத்தைவிட்டு வேறிடம் சென்றனர். சுவர்க்கத்தில்வாழுந் தேவர்களும் தீய அசுரர்பயம் முதலிய கஷ்டங்க ளடைகின்றனர்; புண்ணியமெல்லாம் ஒழிந்தபின் பிறதேவர்களாற் றலைகீழாகத்தள்ளப்பட்டுப் பூமியில்வீழ்ந்து வருந்துவர்; அவ்வாறு வீழும் எல்லை மூவைந்து தினமுள்ள போதே கண்ணிமைத்தல் உண்டாகும் அப்போது அவர் நஞ்சுடனேகூடிய அமிர்தமுண்டவர்போலாகிப் பல்காலமாக யாம் அனுபவித்த இத்தேவபோகமும் பழுதாயிற்றே! என்செய்வது! இனி இக்கைய இன்பம் விரும்பவொண்ணாது என்று மழியாத இன்ப நிலையே யெய்தலவேண்டும்; அதற்குரிய தவத்தைப் புரிவோம் என்று எண்ணுவார்களானால், நல்விவேகம் உற்றுத் தவஞ்செய்யுஞ் சதுரர் அததேவபோகத்தை விரும்புவார்களோ? விரும்பார்.

“வெள்ளியசெங்கண் விடையானடிக்கமலம்
உள்ளியசெல்வமுடையார் அருவருத்துத்
தள்ளியசெல்வம்” அன்றோ அது.

இங்ஙனம் கூறிய உபதேசமொழிகளைக் கேட்டுக்கொண்டு அனுபவ அங்கீகாரமாக்காது அர்த்தாங்கீகாரமாக இருந்து பிரபஞ்சத்தில் வைராக்கியம் பிறவாத மனமுடையார் என்னபயனடைவர்? பிரபஞ்சத்தை வெறுத்துவிடார்க்குத் தவம்செய்தற்கு ஊக்கம் உண்டாக மாட்டாது. உற்றநோய் பொறுத்தலும் உளதாகாது.

பிறப்புத்துன்பம் இறப்புத்துன்பம் இடையுளநோய்முதலிய துன்பம் இவற்றையெலாம் எண்ணி எண்ணி நெஞ்சந் திடுக்கிட்டுப் புலி தூரத்தக்கண்ட மான் ஓடுதல்போலவும் நெருப்புப்பற்றிய வீட்டில் உறங்கினோன் விழித்துத் தப்பிப்போம்வழி தேடுதல் போலவும் விரைந்தோடிச்சென்று தபோதனர்களாகிய மெய்ந்நெறியாளரைமேவி அவரருளாற் றவநெறியில் நிற்போர் பின்னும் செய்வதென்னையெனிற் கூறுதும்: (தொடரும்)

பத்திராசிரியர்.

தமிழ் நாட்டுத் தற்காலத்தார்.

தமிழ் நாட்டுத்தற்காலத்தார் எனவே தமிழ்நாட்டு முற்காலத்தார் எனவும் தமிழ்நாட்டுப் பிற்காலத்தார் எனவும் ஆய அவ்விரண்டினெடு இந்நவுஞ் சேர்த்து மூன்று பிரிவுகளாம்.

முற்காலத்தாரென்பார் பண்டை முதலிடை கடைச்சங்கத்தார். தற்காலத்தாரென்பார் தமிழ் வழக்கொழிய ஆரியம் துருக்கு இந்துஸ்தானி ஆங்கில முதலிய புறமொழிகளைத் தம்மொழியில் இணைத்தார்.

பிற்காலத்தார் என்பார் தமிழரெனப்படாது பிறராவார்.

எனப் பிரிக்கப்பட்ட பகுதிகளுள் இடையை நமதுபொருள் விரித்தெழுதலுக்கு முடியாக்கியது எவன் கருதியோவெனின் ஏனைய வற்றின் பெருமையையும் சிறுமையையும் சீர்தூக்கி எடுத்துக்காட்டு முகத்தால் இடை திருத்தமுற்றுக் கடைகெடாது காத்தற்கென்க.

இனி ஒவ்வொரு நாட்டின் தட்பவெப்பங்களுக்கு ஏற்றவண்ணம் அவ்வந்நாட்டு மக்கள் உணவு உடை நடை கல்வி உரையாடல் வினை முதலியவைகளை இவல்பாகவே அடைந்துள்ளார்கள் என்பதை நுணுக்க ஆராய்ச்சி உடையார் அறியாது இரார்.

உணவு முதலியவைகள் தட்ப வெப்பங்களுக்கு ஏற்றவண்ணம் அவ்வந்நாட்டிற் கியையுமாறு: தமிழ்நாடு வெப்பமுடைத்தாதலின் நமதி யாக்கைக்கு உட்பொறிகள் மிகமென்மைகொண்டுள்ளன அவைபற்றி அன்றே விரைவில் அறும் மென்மையனவாம் உணவுகளை உட்கொண்டு வருகிறோம். இக்கூறியவற்றிற்கு ஒவ்வுமாறு குளிர் நாட்டாராகிய மேனாட்டார்களுக்கு உடற்கருவிகள் வன்மையனவாய் இருத்தல் பற்றி வன்மையனவாகிய வுணவுகளையும் அவை அறவேண்டி மயக்கப் பொருள்களையும் உட்கொண்டு வருகிறார்கள்.

உடைமுதலியன.

நாம் நமது வெப்பநாட்டிற்கு இயையுமாறு பருத்தி முதலியவைகளால் இயன்ற ஆடைகளை உடல்முழுவதும் கால் பரவும்படி உடுத்தி வருகிறோம். மேனாட்டார்களோ தங்கள் குளிர்நாட்டிற்கு இயையத் தங்கள் மேற்குளிர் தாக்காவண்ணம் நவீனமாக ஆட்டுமயிராலியன்ற அங்கிமுதலிய உடைகளை உடல் முழுவதும் புலனாகாவண்ணம் மூடிக் கொள்ளுகிறார்கள். அன்றியும் மருத்துவநூன் முறைமைப்படி உச்சியிலே எப்பொழுதும் வெப்பம் இருந்துவரல் வேண்டுமெனும் கொள்கைக் கொத்தபடி நாம் குஞ்சி (ஆண்மயிர்) முதலியவற்றை வைத்துக்கொண்டிருக்கிறோம்.

இக்குஞ்சி முதலியவைகளை உச்சியின் ஒருபுறமாக வைப்பது அதனிடத்துத் தட்ப வெப்பங்கள் மிகாதும் குறைவுறாதும் காத்தற்கென்க. ஒருநன்செய் நிலத்திற்குப் பாய்கால் வடிகால்களால் எவ்வளவு உபயோகம் பொருந்துமோ அற்றேபோல நமது மூளைக்குமென்க.

இம்முறையை நடத்துவது மேனாட்டாருக்கும் ஒப்ப முடிந்ததாயினும் அவர் அவ்வாறு கைக்கொண்டால் அதை அடிக்கடி நீராற்கழுவித் தூய்மைசெய்ய வேண்டுமென்றே? அவ்வாறு ஆற்றுவதற்கு அவர் நாட்டுக்குளிர் இடங்கொடாதாகலின் அன்னார் நூதனமாக மயிரைக்கத்தரித்துக்கொண்டு குளிர்தாக்காமற் சூடுபெருதற்குத் தலையிலே கூடை போன்ற ஒன்றைக் கவிழ்த்துக்கொள்கிறார்கள். இவைகட்குமாறாகத் தலைமயிர் வைக்கவேண்டியவர் வைக்காமலும் வைக்கவேண்டாதார் வைத்தும் அவ்வாறன்றி இருவகைப் பகுதிகளிற் சிலவற்றைக் கையாண்டும், உணவு முதலியவைகளிலே அவ்வாறாகியும் வரும் செயல்கள் தட்ப வெப்பங்களுக் கொவ்வாதனவாய் நோய் அறிவின்மை அற்பாயுள் முதலியவற்றால் இடர்ப்பட்டுப் பெறுதற்கரிய இப்பிறப்பை அவமே அழியச் செய்யும் என்பது தேற்றம்.

கல்வி.

கல்வி என்பது நாம் உலகினோடு ஒழுகி இருமையும் வழுவாது பெறற்குத் துணையாக நமது முன்னோர்கள் தமது பழக்க வழக்கங்களாற் கண்டவைகளைக்கொண்டு இவ்விவர் தீமைகைக்கொண்டு இருமையுமிழந்தாரெனவும் இவ்விவர் இவ்விவ்விதம் இவ்விந் நன்மைகளைக்கைக்கொண்டு இருமையும் பெற்றார்களெனவும் கூறு முகத்தாலே நமக்கு ஆகும் நன்மையை ஆக்கிப் போகுந் தீமைகளைப் போக்குவதற்குத் துணையாயது எனவே நாம் செய்ய வேண்டியவைகளையும் செய்யப்பட வேண்டியவைகளையும் ஒருவரோடு உரையாட வேண்டியவைகளையும் உரையாடப் படவேண்டியவைகளையும் நம்மில் ஒவ்வொருவரும் செவ்வனே அடைந்து இருமையும் பெறற் கின்றி யமையாததென்பது பெற்றும். உலகத்தில் பிறர் உதவி இன்றி ஒருவரும் வாழ ஒண்ணாது. ஆகவே ஒவ்வொருவரும் பற்பலருடன் நட்புரிமை பூண்டு அவ்வவர் ஆதரவாலே உய்யவேண்டி இருக்கிறது. இவ்வாறு புரிவதற்கு அனுபவமும் நல்லறிவும் இன்றியமையாக் கருவிகளாம். அவை மக்கட் பிறப்பினருக்கு இயற்கையிலே இல்லை என்பது திண்ணம்.

இதற்குக்களியாக (சாக்ஷியாக) நம்மில் ஒவ்வொருவரும் தன்னம் தனியே இருக்குமுழி ஆற்றும் புல்லிய வினைகளையும், காண்பதாற் கேட்பதால் நிகழும் வேட்கையும் விருப்பும் பெற்று உள்ளம் உழல்வதையும்

மன்றறிய நவலுவரேல் அன்னாருக்கு ஒறுப்பும் (தண்டமும்) சாலச்சிறியனவே என்றதை மறுப்பாரிலர் என்பது எவர்க்கும் ஒப்பமுடிந்ததே.

மேலும் பின்னர் விளக்கப்படும் ஒரு சிறுகாட்டே (மேற்கோளே) இல்லை என மறுப்பாரை ஒறுத்து அடக்கும். நம்மில் ஒவ்வொருவரும் தம்தம் பொருள்களைக்கடிமிகுவைப்பில் (காவல்மிக்க இடத்தில்) வைத்துக் கபாடஞ்சாத்தித் தாழ்க்கோலை இடுப்பில் அடக்கம் புரிகின்றோமல்லவா? அவ்வாறூற்றும் நம்மவர் எவரையும் இதுபற்றி வினவில் அவர், பிறர்தமதுடைமையை வௌவாது இருத்தற் பொருட்டே புரிகின்றோம் என்கின்றார்கள் இவ்விதம் அவர் முற்றும் விடையளித்தல் காரணத்தால் நம்மில் ஒவ்வொருவரும் பிறர்குறை கூறு நேர்மையான் எல்லோரும் கள்வர் ஆகின்றாமென மெய்ப்பிப்பது மிகையாமென்க. அல்லாமலும் நம்மை நன்னெறியுடையரென நன்குமதித்தா? துரைத்தனத்தார் சிறைமுதலியகாவல்களை அமைத்து இருக்கின்றனர். இக்காட்டியவைகளால் நமக்கு இயல்பாய் அமைந்தன தீக்குணமும் தீச்செய்கையும் என்பதுபோதரும். இவற்றால் அவ்வவர் தீக்குணங்களுந் தீச்செய்கைகளுமே புறப்பட்ட இடத்துத் தீயரெனவும், அவைபுலனாகா இடத்தே அவரை நல்லரெனவுங் கருதுகின்றோம். அல்லாமலும் தத்தஞ் செயலை உள்ளபடி உணர்த்தலாகாரைப் பொய்யரெனவும் வெளியணி செய்வாரை மெய்யரெனவும் கொண்டு நல்லாரை ஒறுத்தும் தீயாரை நன்குமதித்தும் வருவதாலே பொது நன்மையை அழித்துப் பழிக்காளாகின்றோம்.

உலகத்தில் அநேகமாக எல்லாரும் உள்ள அழுக்கறுமலிருக்கின்றனர். ஆயினும் மக்கட் பிறப்பினர் ஒவ்வோர் அமையத்துத் தாம் தாம் மேம்பட்டு உயரவேண்டுமெனக் கருதுவதுமுண்டு இவ்வமைய்த்தில் ஒருவேளை தந்நயங்கருதிப் பிறரைத் தீமைக்காளாக்கும் தீச்செயல் புரிவதும் இங்கு இயையும். விருப்பு வெறுப்பால் நல்லனவற்றை அல்லனவாகவும் அல்லனவற்றை நல்லனவாகவும் ஓர்ந்து இடர்ப்படுவது நமதியற்கையாயிற்று. இவ்வாறாய நாம் பற்பலருடன் எல்லா ஒற்றுமைகளும் நிறைந்து விளங்கற்கு நட்புரிமைகொண்டு ஆவன ஆக்கிப் போவன போக்கி நடந்தவை கருதி நடக்கின்றவைகளைத் திருத்த முயல்வது இயலுமா? இது கருதித்தான் முன்னோர்கள் நமது நன்மைக்காகப் பல துணைக்கருவிகளை அருளிச்செய்து இருக்கின்றார்கள். அவையே நூல்களெனப்படும் ஒருவழக்கின் மாறுபாட்டால் குறைநேர்ந்த இருவர்கள் பழக்க வழக்க நெறி தெளிந்து மன்றுக்குரைப் பாரைத் துணைக்கொண்டு வழக்கிடும் அமையத்து அவ்வவரும் ஆராய்ச்சியார் மனங்கவர்ந்து கல்விப் புலமையைக் காட்டி மெய்ம்மையை ஒளிப்பாரன்றே? அவ்வமையத்து

ஆராய்ச்சியார் அவ்விதமாய் வழக்குக்களை எவ்வெவர் எங்கெங்கே எவ்வெவ்விதம் முடிவுசெய்து இருக்கின்றனர் எனப் பலகாலும் அமைதியொடு செவ்வனேர்ந்து தன்னறிவு கூட்டித் தீர்ப்புரைத்தல் செய்வாரன்றே? அவ்வே (அவையே) போல, நாமிழந்தனவற்றை அடைய வேண்டிய பொழுதும் அடைய வேண்டாதனவற்றை அடைய நேர்ந்த பொழுதும் பிறாருதவி நாடவேண்டும் இடத்தும் தம்முதவி பிறர் வேண்டுமிடத்தும் செய்வனவற்றையும் செய்யப் படுவனவற்றையும் இவைபோன்ற பிறவற்றையும் நாம் நம் முன்னோர் இவ் இவைகளில் எவ்வெவர் எவ்வெவைகளை எவ்வெவ்விதம் அனுசரித்து எவ்வெவ்விதமாயினர் என அறிந்தாலன்றி அவைகளை ஒழுங்காக்கமுடியுமா? ஆகலின் அவை அனைத்தும் அறிந்தாய்ந்த பின்னரே நம் நற்கருமங்களிற் றலையிடுவது முறைமையாயிற் றென்பது வெளிப்படை. இக்கூறியவைகளுக்குச் சார்பாக அவ்வந்நாட்டுச் சான்றோர்கள் தட்ப வெப்ப நிலைமைக்கேற்ற இயல்பாய் அமைந்தனவைக்கொவ்வுமாறு தம்போன்றோர் புரிந்து நன்மையுற்ற முறைமைகளை விதிப்பதாலும் அவைகளுக்கொவ்வாதவாறு அல்லாதவர் புரிந்து தீமையுற்ற முறைமைகளை விலக்குவதாலும் இருமையிலும் நம்மை வழுவாதுகாத்தற்காகவே தாம் தாம் அறிந்த (கண்ட) அனுபவ முறைகளை ஒழுங்காகத் தொகை வகை விரிவழிப் பலரும் யாத்திருக்கின்றார்கள். அவையே நூல்களெனப்படும். இந்நூல்களால் நமது தீமையகன்று நன்மை கைகூடும். ஒவ்வொரு நாட்டாரும் அவ்வந் நாட்டிற்கு இயையும் பழக்க வழக்கங்களையே கல்வியாக்கி இருத்தலின் தம் நாட்டை அறியாது பிறநாட்டை அறிவது தீமையேயன்றி நன்மையே இன்மையானும் குளிர் நோயுற்றோருக்கு வெம்மை நோய் தீர்க்கும் மருந்துப் பலனெனப் பாழ் படுவதாலும் குணமுதலியவைகள் மாறுபடுவதாலும் ஒருவர் சட்டமே ஒருவர்க்கியலாதது கொண்டே கல்வி ஒருகாலும் மாறுபடக் கூடாதெனவும் இவைபோன்ற பிறவும் வெள்ளிடை வரையிற் றெள்ளிதிற் கண்டு கொள்க.

உரையாடல்.

நாம் பனிக் காலங்களில் வன்மையன வாகவும் கோடையில் அலைந்து வந்தபோது மெல்லியன வாகவும் உரையாடுகின்றோம் அல்லவா? அவ்வாறு புரிவது எது பற்றி யெனின் தட்பம் மிகுதிப்பட மிகுதிப்பட உரை உரப்பியும் வெப்பம் மிகுதிப்பட மிகுதிப்பட உரைதணிந்தும் இயைவது இயற்கையென்பது தேற்றம். இதற்கோர் சான்றாக நம் நாட்டின் உட்பகுதிகளில் ஒன்றாகிய மலையாளத்தில் மழை மிக்குக்குளிர் தாக்கலில் அன்னவர் ஜலதோஷத்தால் அலைப்புண்டு மூக்கால் அதிக

மாக முயற்சித்து உரத்திப் பேசுவதும் கண்டறிந்திருக்கிறோம். குளிருக்குறைவிடமாகிய மேனாட்டார்கள் இடிக்கும் இடியொலி நமது செவிகளைச் செவிடுபடுத்துவதும் எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு ஓர் ஒப்பற்ற துணையே. இக்காட்டிய காரணங்களால் ஒவ்வொருவரும் புறமொழிகளை உரையாடுவதால் இதையத்து நோயுடையாராகி எல்லாத் தீமைகளுக்கும் இருக்கையராகி வருந்துவர் என்பது பகரவும் வேண்டுமோ?

(தொடரும்)

K. S. நவநீத கிருஷ்ணபாரதி,
தலைமைத்தமிழ்ப்பண்டிதர், இராமநாதன் காலேஜ்,
சுன்னாகம்.

பத்துப்பாட்டு.

(கoடு - ம் பக்கத் தொடர்ச்சி.)

கூ-வது பட்டினப்பாலை:—இது ங௦க - அடிகளுடையது; வேற்றுநாட்டிற் செல்லத் தொடங்கிய தலைவன் தன்னெஞ்சைநோக்கித் தலைவியைப்பிரிந்து வாரேன் என்று செலவழுங்கிய கூற்றாகப் பாடப்பட்டது; இதிற் காவிரியின் சிறப்பும், காவிரிப்பூம் பட்டினச் சிறப்பும், கரிகாற்சோழனது வீரமும் செங்கோலும் கூறப்பட்டுள்ளன. இந்நூற்குக் கரிகாற்சோழன் பதினாறு லக்ஷம்பொன் பரிசளித்தானென்று கலிங்கத்துப்பரணி கூறும்.

இப்பாட்டு 'வசையில்புகழ் வயங்குவெண்மீன்'' எனத்தொடங்கி
"கோலினுந்தண்ணிய தடமென்றோளே.'' என முடிந்துளது.

இது பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறிய பாலைத்திணையாகலின், இதற்குப் பட்டினப்பாலையென்று பெயர் கூறினர். பாலையாவது: பிரிதலும் பிரிதல் நிமித்தமுங் கூறுவது. இங்கு முதற்பொருள் கருப்பொருள் கூறாது, உரிப்பொருளே சிறப்பக் கூறுவதாம்.

"வசையில்புகழ் வயங்குவெண்மீன்
திசைதிரிந்து தெற்கேகினும்
தற்பாடிய தளியுணவிற்
புட்டேம்பப் புயன்மாறி
வான்பொய்ப்பினுந் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி''

இவ்வடிகள் காவிரியின் சிறப்புணர்த்துதல் காண்க.

"திருத்துஞ்சுந்திண்காப்பிற்
புகழ்நிலைஇய மொழிவளர
அறனிலைஇய அகனட்டில்
சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்தொழுகி''

"அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடைவல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி"

"தமவும்பிறவும் ஒப்பநாடிக்
கொள்வதூஉமிகை கொளாது கொடுப்பதூஉங் குறைபடாது
பல்பண்டம் பகர்ந்துவீசும்
தொல்கொண்டித்துவன் றிருக்கை"

"மொழிபலபெருகிய பழிதீர்தேஎத்துப்
புலம்பெயர்மாக்கள் கலந்தினிதுறையும்
முட்டாச்சிறப்பிற் பட்டினம்"

எனவரும் இவை காவிரிப்பூம்பட்டினக் கவின் விளக்குவன.

"நண்ணிநிறுணர நாடிநண்ணார்
செறிவுடைத்திண் காப்பேறிவாள்கழித்
துருகெழுதாய மூழினெய்தி"

"அருங்கடிவரைப்பி னூர்கவினழியப்
பெரும்பாழ்செய்து மமையான் மருங்கற
மலையகழ்க்குவனே கடறூர்க்குவனே
வான்வீழ்க்குவனே வளிமாற்றுவனெனப்
தான்முன்னிய துறைபோகலிற்
பல்லொளியர் பணிபொடுங்க"

"காடுகொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம்பெருக்கிப்
பிறங்குநிலைமாடத் துறந்தைபோக்கிக்
கோயிலொடு குடிநிறீஇ"

இவ்வடிகள் கரிகாற்சோழனது வீரத்தையும் செங்கோலையும் சிறப்பக் கூறியன. இந்நூலின் முக்கிய கருத்து:—

"நெஞ்சமே! வாரிருங்கூந்தல் வயங்கிழை இவளைக்கொண்டு செல்வோமென்னில், நுண்ணிதாக ஆராய்ந்து பகைவர்படையை யோட்டி அரசவுரிமையை முறையாலே பெற்று, தென்னவன் திறல்கெடச் சீறித் தான்பெற்றவற்றால் மகிழானாய் மேலு மாசைமிக்கு உலகம் பிரதாபத்தை எடுத்துக்கூற யானைமுதலியவற்றோடுசென்று, பகைவரூர்களைப் பாழ்செய்தும் அமையானாய் ஒளிநாட்டார் தாழ்ந்து ஒடுங்க அருவாள நாட்டரசர்வந்து தன்றொழில்கேட்க வடநாட்டரசர் குடநாட்டரசர் பொதுவர்

இருங்கோவேள் முதலியோர் மனங்குறைந்துவாட வெற்றிகொண்ட கழலணிந்த காலினையும் சிங்கவேற்றையொத்த வலியினையு முடைய கரிகாற் பெருவளத்தான் பகைவரைக் கொல்லுதற்கு வைத்துள்ள வேலி னுங் கடியனவா யிருந்தனகானம்; இவள் தோள் அவன் செங்கோலினுந் தண்ணியவாயிருந்தன; இவளைப் பிரியாதுறைதலில் யான் போதற்கு ஆற்றுவாயிராநின்றன; ஆதலால், காவிரி புனல் பரந்து பொன்கொழிக் கும் பல ஊர்களையுடைய சோழநாட்டில் கழ்சூழ் படப்பை பூந்தண்டலை பொய்கை முதலியவற்றையுடைய முட்டாச்சிறப்பிற் பட்டினத்தை எனக்கு உரித்தாகப் பெறுவேனுயினும், யான் நின்னேடுகூட வாரேன் நீ போய் வாழ்வாயாக" என்பதாம். (தொடரும்)

பத்திராசிரியர்.

நம் தாய்மொழியும் அதன் பெருமையும்.

(ககஎ - ம் பக்கத் தொடர்ச்சி.)

எ. ஆரியம் வடதிசை சென்று, வடமொழியெனப் பெயர்பெற்று நைமிசாரண்ய ரிஷீஸ்வரர் கூட்டத்தினுலும் பின்னர் வேதியவித்தகர்க ளாலும், பரிபாலிக்கப்பட்டுச் சிறப்புற்றும் கடைசியில் உலகவழக்கின்றி இறந்தது. தமிழ் என்னும் பெண்ணே தென்றிசையெய்தி, தென் மொழியெனப்பெயர்பெற்று மங்கைப்பருவமடைந்து என்றும் இளமைத் திறம் பொருந்தி விளங்குகிறது.

அ. மனேன்மணி என்னும் நாடகத்திலும் தமிழ்த்தெய்வ வணக் கத்தில்,

"பல்லுயிரும்பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினும்ஓர்
எல்லையறுபரமபொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும், களிதெலுங்கும், கவின்மலையாளமும், துளுவும்
உன்னுதரத்துதித்தெழுந்தே யொன்றுபலவாயிடினும்
ஆரியம்போல் உலகவழக்கழிந்தொழிந்து, சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே."

தமிழ் தனக்கு இணையில்லாப் பாஷையெனப்பொருள்பெறுமெனச் சிலர்சொல்லுகின்றனர். அது எவ்வாருயினும் தமிழ் என்னுந் தென் மொழிக்குத் தென் சொல்லாலாகிய 'இனிமைப்பெயரெனக் கொள்ளலே தகுதி. வேறு சிலர் தமிழ் தனிப்பாஷையன்றென்றும்வேறு சிலர் ஸம்ஸ் கிருதத்தினின்றும் உற்பத்தியா யிருத்தல்வேண்டுமென்றும் கூறுகின்ற னர். அது சிறிதும் பொருந்தாதென்பதற்கு ஆதாரங்கள் பலவுள.

௯. சங்கமருவிய நூல்களாகிய, குறள், திரிகடுகம், நான்மணிக்கடிகை, சிறுபஞ்சமூலம், ஏலாதி, பழமொழி என்பவைகளில் ஸம்ஸ்கிருத பதங்கள் எவ்வளவோசொல்பமாய்க்காணப்படுகின்றன. தமிழ்ப்பாஷைக்கு ஸம்ஸ்கிருதம் தாயாயின் பண்டைக்காலத்தினவாகிய மேற்கூறிய நூல்களில் சம்ஸ்கிருதம் விசேஷமாய் விரவியிருத்தல் வேண்டுமே.

௧௦. இன்னும் வடமொழியிலில்லாத புணர்ச்சி இலக்கணங்களும், பால், விகுதி, ஐந்திணை இயல்புகளும் அவற்றினது துறைகளும், வெண்பா, கலித்துறை முதலிய செய்யுளிலக்கணங்களும் தமிழ்ப்பாஷைக்குளவாகலான், இவையனைத்தும் முதல்நூலாகிய அகத்தியத்தின்கண்ணே கூறப்பட்டிருத்தலால், தமிழ் இலக்கணம் வேறு, ஸம்ஸ்கிருத இலக்கணம் வேறு என்று தெளிவாகிறது. ஆராயப்புகின் இவைபோன்ற அநேக நியாயங்கள் நமக்குத் தோன்றும். இன்னும் தமிழில் ஸம்ஸ்கிருதம் விரவியிருத்தற்குக்காரணம் என்னவென்றால் பண்டைய காலத்து வித்வான்கள் இருபாஷையிலும் அதிகத்தேர்ச்சி யடைந்திருந்தமையால் அவர்கள் கலந்து பேசிவந்ததேபோல் இப்பொழுதும் வழங்கிவருகிறது.

௧௧. கல்விகற்காவிடில் நாம் எடுத்தஜென்மம் வீணாகிவிட்டதென்று திட்டமாய்த் தெரிந்து கொள்ளவேண்டும். பொருட்செல்வத்தை நாம் மதிக்கலாகாது. இது இன்றிருந்து நாளைபோய்விடும். கல்விச்செல்வமோ ஒருபோதும் நீங்குவதுமில்லை அழிவதுமில்லை. இகத்திலன்றிப் பரத்திலும் கீர்த்தியை விளைவிக்கக்கூடியது. தந்தையினும் தாயே சிறந்தவள். ஆகையால், நமக்கும் நமது பெற்றோருக்கும், நமது மூதாதைகளுக்கும் பரம மாதாவாகிய தாய் நாட்டினிடத்தில் எப்பொழுதும் அபிமானமும் பக்தியும் உடையவர்களா யிருத்தல்வேண்டும். அதைப்போலவே தாய்ப்பாஷையிடத்தும் பூரணபக்தி செலுத்தல்வேண்டும். தாய் தந்தையரிடம் பக்தி இல்லாதவனை எப்படி உலகத்தோர் இகழ்வாரோ அதுபோல் தாய்ப்பாஷையை ஆதரிக்காதவனையும் உலகத்தோர் இகழ்வார்கள்.

௧௨. நம்மைப்பெற்றதுந் தமிழ், வளர்த்ததுந்தமிழ் நம்மைத் தாலாட்டியதுந்தமிழ், நம்மழலைச்சொற்களெல்லாந்தமிழ், நம்மாதா பிதாக்களை மகிழவைத்ததுந்தமிழ், முந்தி உச்சரித்ததுந்தமிழ், நம் தாய்தந்தையர் பாலுடன் புகட்டியதுந் தமிழ், நமதாசிரியர் நமக்கு ஆதியில் உபதேசித்ததுந் தமிழ், நம்முன்னோர் கையாடிவந்ததுந்தமிழ், மறைமுதற் பொருளெலாந்தமிழ், நாயன்மார்களும், ஆழ்வாராதிகளும் கையாண்டு பக்தியையடைந்ததும் இத்தமிழாலேயாம். இப்படிப்பட்ட தமிழை ஆதரியாதிருப்பது நமக்கே வெட்கமாயிருக்கவில்லையா? நண்பர்களே சற்று ஆலோசியுங்கள். உண்மைவிளங்கும்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

௧௩. ஐரோப்பியர் தமக்குரிய பாஷைகளை எவ்வளவோ கௌரவமாகப் போற்றிவருகிறார்கள். அவர்களில் ஆங்கிலேயர், க்ரீக், லத்தீன், பிரஞ்சு, ஸம்ஸ்கிருதமுதலிய பலபாஷைகளிலிருந்து, பற்பல பதங்களைப் பொறுக்கி எடுத்து இங்கிலீஷ்பாஷையென நாமம் சூட்டி அதைத் தங்களுடைய சொந்தப்பாஷையாகக் கொண்டு, அதனை விருத்திசெய்வதற்குப் படும்பாடு யார் அறியாதவர்? அவர்களுக்குத் தங்கள் பாஷையிலிருக்கும் அபிமானங்கூட நம்மவர்களுக்கு நம்முடைய பாஷையிலில்லாமற் போயிற்றே! அபிமானம் குறைந்ததன்றிப் புலவர்களையும் பாஷையையும் அலட்சியம் செய்கிறார்கள்!

௧௪. சகோதரர்களே! சகோதரிகளே!!

நமது தாய்ப்பாஷையை ஒருபோதும் அலட்சியம் செய்யலாகாது. பாடசாலையில் வித்தியா இலாகா ஏற்பாட்டின்படி தமிழ்ப்பாஷை நமக்கும் போதுமான அளவு போதிக்கப்படாததினால், புத்தகங்களைவாங்கி வீட்டில் பெரியோர்கள் உதவிகொண்டு விருத்திசெய்து கொள்ளவேண்டும். அவ்வாறு நமது தாய்ப்பாஷை விருத்தியானால் தான் நாம் முன்னுக்கு வருவதற்கும், நமக்குவேண்டிய எல்லாவற்றையும் பெறுவதற்கும் இன்றியமையா ஆதாரவாகும்.

மாணவன்.

திருவாரூர்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்."

(௧௧௯-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஸ்ரீராமன் காடுசென்றானென்று சொல்லக்கேட்ட பரதன் தன் தாயாகிய கைகேசியை அவள்செய்த சூழ்ச்சிக்காகப் பலபடமுனிந்து கூறிக் கௌசலை முன்சென்று "எம்முனை (என் அண்ணனை) வஞ்சித்து இவ்வரசியலைக் கைக்கொள்ள விரும்பினேனாயின் இவன் இவன் எய்தும் நாகினில் யானும் எய்துக" வென்று சூளுறவு கூறுகையில்,

"தாய்பசி யுழந்துயிர் தளரத் தான்றனிப்
பாய்பெரும் பாழ்வயி றளிக்கும்பாவியும்
நாயகன்படநடந் தவனும் நண்ணுமத்
தீயெரி நாகிடைச் செல்க யானுமே." என்று

கூறியுள்ளார். இதனால் தாய்தந்தையர்கள் பசியால் நலியக்கண்டும் மனமிரங்காது தாங்கள்மட்டில் உண்ணுகின்ற பாவிகள் "மாதா மனமெரிய வாழா யொருநாளும்" என்ற மூதுரைக்கேற்ப அநேககற்பங் கடந்தாலும் கரை ஏறப்படாத மீளா நரகிற்காளாவார்களென்று அறிக.

ஒரு மனைவி போனால் பல மனைவி வருவார்கள் தவமிருந்து பெற்ற தாய்தந்தையர் போனால் வருவார்களாவென்று யோசியாமல் பெண்ஜாதித் தெய்வமே பெருந்தெய்வமாகக்கொண்டு அவள் சொற்படி தாய்தந்தையர்களைத் துர்ப்பாஷைகளால் வைவதோடு நில்லாமல் நைய அடித்து உண்ண உணவும் உடுக்க உடையுமின்றி நடுத்தெருவி லலைய விட்ட மாபாவிகள் எத்தனைபேர் இந்நிலவுலகிலுலவு கின்றனர்!

ஆதலின், சகோதர சகோதரிகளே! நாமும் அம்மதியீனர்களைப் போல் மூடத்தனமாய் நடந்துகொள்ளாமல் தாய் தந்தையர்களைக் கனப் படுத்தி அவர்கள் பேச்சைக்கேட்டு அதன்படி நடக்கமுயலவேண்டும். அவர்கள் முதுமையெய்திய காலத்தில் அவர்கட்கு வேண்டுவனவற்றை அவர்கள் வாய்திறந்து கேளாமுன்னரே குறிப்பறிந்துதவி உபசரிக்க வேண்டும். அவர்களைத் தெய்வமெனக்கொண்டு தினமும் அவர்கள் பாதத்தில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து ஆசீர்வாதம் பெறுதல் நலம். பெற்றோர்களைக் கௌரவப்படுத்தி உபசரிப்பதைக் காட்டிலும் சிறந்த ஆசாரம் எவ்வித கிருகஸ்தனுக்கும் இல்லையென்றும் அதுதான் இல்லறத் தானுக்கு நித்தியகடமையென்றும் அறநூல்கள் கூறுகின்றன. மேலும் அவர்கள் மண்ணுலகை நீத்து விண்ணுலகடைந்தபொழுது அவர்களுக் குச் செய்யவேண்டிய பிரேதசமஸ்காரம் முதலாகிய கடன்களெல்லாம் குறைவறச்செய்து முடித்தல் பிள்ளைகளின் கடமையாம். இவ்வாறன் றிப் பெற்றோர் முதுமையடைந்தபோது, அன்னையும் பிதாவும் அஷ்டமச் சனியன் என்று நினைத்து அவர்கள் பேச்சை அசட்டைசெய்து அவர் களுக்குக் கஞ்சியும் வார்க்காமல் கதறவிடுவோமாயின், தாய் தந்தையர் களுக்கு அடங்கி நடக்கவேண்டுமென்று கட்டளையிட்டருளிய பரமேச் சுரன் கருணைக்கபாத்திரராகி இம்மை மறுமை என்ற இரண்டினும் துன் பத்தையே அனுபவிக்கநேரிடும் என்பதிலையமில்லை. ஆகையால் ஜக தீசனுடைய ஆஞ்ஞையைக் கைப்பற்றி மாதாபிதாக்களைத் தெய்வமெனக் கொண்டு வணங்கிக் கடவுள் கிருபைக்கிலக்காகி இம்மை மறுமை இரண் டினும் இன்பமெய்திவாழ முயலுவோமாக.

“தாயினிற் சிறந்த தெய்வமில்லையுயர் தந்தைதன்னின்
எயநற் குருவுமில்லை யென்னின்மற் றிவர்கடாளில்
தூய்மலர் தூவிநாளுந் தொழுதிடு மறிஞர்தாமே
ஆய்கதிர் பரப்பும் பொன்னாட் டமரராயினிது வாழ்வார்.”

நா. ராமசாமி நாயகர்,
கூத்தப்பாக்கம்.

அம்பிகாபதியும், அரசிளங்குமரியும்.

இஃதோர் தமிழ் நாடகம். இயல் இசை நாடகம் என்னு முத்தமிழ்க்குள் இயற்றமிழ் இலக்கண இலக்கியங்களே இப்போது கிடைக்கின்றன. ஏனை இருவகைத் தமிழும் அரியவாயின. நாடகத் தமிழ்க்கு இயலும் இசையும் உதவியாம். இந்நாடகமே அறிவினுயர்ந்தோர் குறைந்தோர் யாவரையும் எளிதின் மகிழ்விப்பது. இதனாற் பெரும்பயனுண்மையோர்ந்து, சென்னைப் பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் கா. ர. கோவிந்தராஜ முதலியாரவர்கள் இப்புத்தகம் வெளியிட்டனர். இது தமிழ்க்குபகாரமே. பழயநாடகத் தமிழ் இலக்கிய முறையின் குறிப்பு, சிலப்பதிகாரம் கோவை முதலியவற்றில் இருப்பதைத் துணைக்கொண்டியற்றப்பட்டது; இனிமையான வசனநடையும் செய்யுள் நடையும் உடையது; காதற்சுவையைக் கவின்பெறப் புனைவது; நீதிபலவற்றை நேரிதினிகழ்த்துவது; இது கம்பரது புதல்வர் அம்பிகாபதியின் சரிதமே. இதைப் படிப்போர்க்குத் தமிழ்ச்சுவையோடு மகிழ்ச்சி பெருகுமென்பதொருதலையாம். கிரவுன் சைசில் 160 - பக்கங்களுடையது. விலை அணா–10. ரிப்பன் பிரஸ் முதலிய இடங்களிற் கிடைக்கும். ஆக்கியோர் விலாசத்திற்கும் எழுதிப் பெறலாம்.

மங்கையர்க்கரசி காதல் முதலிய கதைகள்.

இப்பெயர்கொ ... ஸ்ரீமத் - வ - வெ - சுப்பிரமணிய ... பட்டது. இவர் முன் சந்திரகுப்தன் சரித்திர ... யிட்டதை எவருமறிவர். இப்போது இம்மங்கையர்க் ... முதலியன வீரம்முதலிய சுவை பயப்ப நன்முக எழுத ... கிறது. படிப்போர்க்குப் பல வகையிலும் மனங் கள ... செய்யும் வாய்ப்புடையது. சில சந்தர்ப்பங்களில் உலக ... பேசுவதுபோலவே எழுதப்பட்டிருக்கிறது. மற்றைய ந ... யையும் வாங்கிப்படித்தவர்கள் அறிந்துகொள்ளுவார்கள். இது யாவர்க்கும் உதவும். புத்தகம் ஒன்றின் விலை அணு 10. இதன் ஆசிரியர்க்கு எழுதிப் பெறலாம்.

அறிவிப்பு.

நமது "தமிழ் மகவு" ஒவ்வொரு தமிழ் மாதங்க ... உ0 உ க்குள் அதன் சந்தாதாரர்கள் வசம் சேரும். அவ ... சேராவிடின் உடனே அங்கங்குள்ள போஸ்டு மானேஜருக் ... தெரிவித்துக் கொள்ளவேண்டும். மாதந்தோறும் கவன ... எல்லா விலாசங்களையும் இருமுறை பார்வையிட்டே ... கள் அனுப்பப்படுகின்றன. பத்திரிகை மேற்படி ... வந்து சேராவிடின் அது எமது குறையென் றெண்ண ... கெளிலும் விசாரித்துக் கிடைக்காவிடின், பத்திரிகை ... க்கு எழுதினுல் பெறலாம்.

கூ0 - சந்தாதாரர்களைச் சேர்த் ... செய்பவர்கட்கு இனமாகப் பத்திரிகை ... படும். மாதிரிப்பத்திரிகை வேண்டு ... அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம்:— "புதுவைத் தமிழ்ச் சங்கம்" ஆபீ ...
நெ. 48. ரங்கப்பிள்ளை வீதி
புதுவை.